ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2020 யூன் 15 |

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2020 மே

தயாரிப்புத் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 2020 மேயில் 49.3 சுட்டெண் புள்ளிகளினை அடைந்து ஒரு குறிப்பிடத்தக்களவு எழுச்சியினை பதிவு செய்ததுடன் இது 2020 ஏப்பிறலில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து காலத்திற்குமான தாழ்ந்த 24.2 சுட்டெண் புள்ளியிலிருந்து 25.1 சுட்டெண் புள்ளிகள் கொண்ட ஒரு அதிகரிப்பாகும். தயாரிப்பு துறையின் பொருளாதார நடவடிக்கைகளின் ஆரம்பத்திற்கு இடநகர்விற்கான தடைகளின் படிப்படியான இலகுபடுத்தல்கள் பங்களிப்புச் செய்தன.

உற்பத்தித் துணைச் சுட்டெண்ணானது 2020 ஏப்பிறலில் பதிவுசெய்யப்பட்ட 3.5 சுட்டெண் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 2020 மேயில் 51.1 சுட்டெண் பெறுமதியினை பதிவுசெய்ததுடன் உற்பத்தி செய்யப்பட்ட அளவுகளில் குறிப்பாக, உணவு, குடிபானங்கள் மற்றும் புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறைகளில் ஒரு குறிப்பிடத்தக்களவு விரிவாக்கத்தினைப் பிரதிபலித்தன. மேலும், புதிய கட்டளைகள், கொள்வனவுகளின் இருப்பு, தொழில்நிலை துணைச் சுட்டெண்களும் 2020 மே மாதகாலப்பகுதியில் மேம்பட்டிருந்தபோதிலும் நடுநிலையான மட்டத்திற்குக் குறைவாகவே இன்னும் காணப்படுகின்றது. இதேவேளையில், காலப்பகுதியில் நிரம்பலர் வழங்கல் நேரம் மெதுவான வீதத்தில் நீட்சியடைந்ததுடன் நிரம்பல் சங்கிலியின் மீதான அழுத்தங்களின் ஒரு மெதுவடைதலினை சமிஞ்சைப்படுத்துகின்றது.

புடவை மற்றும் அணியும் ஆடைகள் தயாரிப்புக்கள் மற்றும் இரசாயன மற்றும் இரசாயன உற்பத்திகள் தயாரிப்புக்கள் துறைகளின் பல்வேறு பதிலிறுப்பாளர்கள் அவர்களுடைய வழக்கமான உற்பத்திகளுக்கான கட்டளைகள் அவர்களுக்கு இன்னும் கிடைக்கப்பெறவில்லை என குறித்துக்காட்டினர். ஆகையால், அவர்களுடைய வழக்கமான உற்பத்திகளுக்குப் பதிலாக சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான சில பதிலீட்டு உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கு ஆரம்பித்திருக்கின்றனர்.

| மாறி | ஏப் | மே | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **24.2** | **49.3** | **+** | **சுருக்கமடைகின்றது, மெதுவான வீதத்தில்** |
| | | **<u>கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்</u>** | | |
| புதிய கட்டளைகள் | 11.1 | 47.3 | + | சுருக்கமடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 3.5 | 51.1 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| தொழில்நிலை | 29.9 | 37.8 | + | சுருக்கமடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 9.7 | 47.9 | + | சுருக்கமடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலாளர்களின் விநியோகிக்கும் நேரம் | 86.8 | 66.5 | - | நீட்சியடைகின்றது மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளில் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பானது முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த போதிலும் தயாரிப்பாளர்கள் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றானது தொடர்ந்தும் உலகளாவிய கேள்வியில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என கரிசனையைக் கொண்டிருக்கின்றனர்.

**கொ.மு.சு**
சுட்டெண் பெறுமதி
**49.3**

2020 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 25.1 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு***

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2020 ஏப்பிறலிலிருந்து 2.6 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 2020 மேயில் 42.4 கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது.

கொவிட் - 19இன் மோசமான தாக்கத்தின் மூலம் 2020 மேயில் இந்தியா, ஐரோப்பிய வலயம், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ருஷியா ஆகிய நாடுகளின் தயாரிப்பு கொ.மு.சு சுருக்கமடைந்ததுடன் சீனாவில் கொ.மு.சு விரிவடைந்தது

*மூலம்: மார்க்கிட்[1], யூன் 15, 2020 இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை*

கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவலின் கட்டுப்படுத்தலினை தொடர்ந்து நாட்டின் பொது மக்களின் வாழ்க்கை மற்றும் நிறுவனங்களினை சாதாரண நிலைமைக்கு மீளக்கொண்டு வருதலின் ஆரம்பிப்பினை நோக்கி எடுக்கப்பட்ட படிகளுடன், **பணிகள் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணானது 2020 ஏப்பிறலில் பதிவுசெய்யப்பட்ட வரலாற்று தாழ்ந்தளவான 29.8 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2020 மேயில் 43.1 சுட்டெண் புள்ளிக்கு குறிப்பிடத்தக்களவு மீட்சியடைந்தது**. இந்த அதிகரிப்பானது புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புக்கள் துணைச் சுட்டெண்களில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களினால் பின்னூட்டப்பட்டது.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**43.1**

**2020 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 13.3 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொவிட்-19இன் உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலினை கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட உள்நாட்டு போக்குவரத்துக் கட்டுப்பாடுகளின் தளர்த்தலுடன் போக்குவரத்து மற்றும் மொத்த மற்றும் சில்லறை வர்த்தக துணைத் துறைகளில் புதிய வியாபாரங்களின் மேம்பாடுகள் காரணமாக புதிய வியாபாரங்கள் துணைச் சுட்டெண் 2020 மேயில் அதிகரித்தது.

வியாபார நடவடிக்கைகள் துணைச் சுட்டெண்ணும் மாதகாலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து பணிகள் நடவடிக்கைகளின் சுருக்கத்திலே ஒரு மெதுவடைதலினை குறித்துக்காட்டியது. வியாபார நடவடிக்கையில் சாதாரணமயப்படுத்தலுடன் போக்குவரத்து, மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், நிபுணத்துவ பணிகள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் துணைத்துறைகளின் வியாபார நடவடிக்கைகள் முன்னைய மாதத்துடன் ஒரு மேம்பாட்டினை காண்பித்தன. எவ்வாறாயினும், தொடர்ச்சியாக இரண்டாவது மாதமாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையின்மை மற்றும் உணவு விடுதிகளின் செயற்பாடுகள் மீது விதிக்கப்பட்ட தடைகளின் காரணமாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபானங்கள் துணைத் துறை உள்ளடங்கலான சுற்றுலாத் துறையுடன் தொடர்பான வியாபார நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்தன.

மேலும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பின்னரான பொருளாதார நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற மீட்சியுடன் எதிர்கால வியாபார நடவடிக்கைகள் மீது பணிகள் துறையின் பதிலிறுப்பாளர்கள் நம்பிக்கையாகவுள்ளனர்.

எவ்வாறாயினும், பணிஓய்வுகள் இருந்தபோதிலும் புதிய ஆட்சேர்ப்புக்களின் நிறுத்துகைகள் காரணமாக தொழில்நிலையானது முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 மேயில் வீழ்ச்சியடைந்தது.

| மாறி | ஏப் | மே | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **29.8** | **43.1** | **+** | **சுருக்கமடைகின்றது, மெதுவான வீதத்தில்** |
| **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | | | |
| புதிய வியாபாரங்கள் | 26.8 | 45.7 | + | சுருக்கமடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கைகள் | 8.9 | 34.2 | + | சுருக்கமடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 33.7 | 27.7 | - | சுருக்கமடைகின்றது, உயர்ந்த வீதத்தில |
| நிலுவையிலுள்ள பணிகள் | 60.8 | 61.0 | + | அதிகரிக்கின்றது, உயர்ந்த வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 18.9 | 46.7 | + | சுருக்கமடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இதேவேளை, நிலுவையிலுள்ள பணிகள் தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் தொடர்ச்சியாக மூன்று மாதத்திற்கு ஒட்டுமொத்த சுட்டெண்ணினை மெதுவடையச் செய்ததுடன் இதற்கு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் நீடித்த தாக்கமே பிரதான காரணமாக அமைந்தது.

***உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தின் காரணமாக உலகளாவிய பணிகள் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 2020 ஏப்பிறலின் 23.7 இலிருந்து 2020 மேயில் 35.2 இற்கு அதிகரித்ததுடன் தொடர்ச்சியாக நான்கு மாதங்களுக்கான சுருக்கத்தினை சமிஞ்சைப்படுத்தியது.

ஐக்கிய அமெரிக்கா, யப்பான், ஐக்கிய இராச்சியம் மற்றும் இந்தியா என்பனவற்றின் பணிகள் கொ.மு.சு முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 மேயில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் சீர்குலைந்திருந்தமையினை எடுத்துக்காட்டியதுடன் சீனா ஒரு மேம்பாட்டினைக் குறித்துக்காட்டியது.

*(மூலம்: மார்க்கிட்[1], யூன் 15, 2020 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு = 50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு > 50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு < 50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.